# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 67/2013

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. ச. பாண்டி சிவகாமி, -உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசோகன் வா.சா.-1 | சாதி | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | |

---

முதல் விசாரணை 07-10-2025.

நான் இந்த வழக்கின் 2 ம் வாதி. வாதிகள் தரப்பு 1 வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

01.03.2013 ம் தேதியிட்ட பிராது வரைபடம் அசல் **வா.சா.ஆ.-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

31.03.1972 ம் தேதியிட்ட தங்கவேலம்மாளுக்கு ஆலப்பன் செட்டியார் எழுதி கொடுத்த பதிவு கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16.11.1998 ம் தேதியிட்ட தங்கவேலம்மாள் எழுதி வைத்த பதிவு உயில் அசல் **வா.சா.ஆ.-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.(உயில் ஆவணத்தை எழுதி வைத்தவர் 1 ம் வாதியாக உயிருடன் உள்ளநிலையிலும், உயில் ஆவணத்தில் கண்ணுற்ற சாட்சியாக கையொப்பம் செய்தவர்கள் மூலம் மட்டுமே குறியீடு செய்ய இயலும் என்ற

நிலையில் 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய கடுமையாக ஆட்சேபணை செய்யப்பட்டது).

தாவா 3 வது லக்க சொத்தை பிரதிவாதி அடைக்கும் முன்பு இருந்த அமைப்பை காட்டும் போட்டோக்கள்-3 அசல் **வா.சா.ஆ.-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி போட்டோக்களுக்குரிய குறுந்தகடு அசல் **வா.சா.ஆ.-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவா 3 வது லக்க சொத்தை பிரதிவாதி அடைத்த பின்பு உள்ள அமைப்பை காட்டும் போட்டோக்கள்-4 அசல் **வா.சா.ஆ.-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி போட்டோக்களுக்குரிய குறுந்தகடு அசல் **வா.சா.ஆ.-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15.11.2010 ம் தேதியிட்ட கதவு எண். 16,17 க்கு வீட்டு வரி ரசீதுகள்-2 அசல் **வா.சா.ஆ.-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

02.11.2023 ம் தேதியிட்ட பொது தகவல் அலுவலர் மற்றும் மேலாளர் அருப்புக்கோட்டை நகராட்சி தங்கவேலம்மாளுக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25.11.2023 ம் தேதியிட்ட டவுண் சர்வே ரிஜிஸ்டர் பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25.11.2023 ம் தேதியிட்ட புல வரைபடம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.